
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1089

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

46

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

படங்கள் உதவி : ஞானம்

# கலைஞரின் ‘காலம் பதில் சொல்லும்’!



**1980**-ஆம் ஆண்டு கலைஞரின் கதை வசனத்தில், இயக்குனர் அமிர்தம் இயக்கத்தில் ஜெய்சங்கர், ராதிகா, சரத்பாபு, மஞ்சுளா, அசோகன், செந்தாமரை, சுருளிராஜன், சுகுமாரி, மனோரமா ஆகியோர் முக்கிய வேடத்தில் நடித்த திரைப்படம் ‘காலம் பதில் சொல்லும்’.

1980-இல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில், திரைக்கு வந்த இப்படத்தில் முழுக்க முழுக்க தி.மு.க.வின் அரசியலையும், உதயசூரியன் சின்னத்தையும் பிரச்சாரம் செய்யும் விதமாகக் கலைஞர் திரைக்கதை வசனம் எழுதியிருப்பார். தயாரிப்பு கருமாரி பிலிம்ஸ், இசை மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன்.

### படத்தின் கதை

பெரும் பணக்காரரான ராஜதேவன்-மீனா (சுகுமாரி) தம்பதியினருக்கு குழந்தை இல்லாத காரணத்தால், மீனாவின் அண்ணன் மாரப்பனின் (கே.ஏ.அசோகன்) குழந்தையை எடுத்து வளர்த்து வருகின்றனர். இந்நிலையில், மீனாவுக்கும் ஒரு ஆண் குழந்தை பிறக்கிறது. தனது மகனுக்கே தங்கையின் சொத்துகள் முழுவதும் கிடைக்க வேண்டும் என்ற பணவெறியில் தங்கையின் குழந்தையை மாரப்பன் கொல்ல வருகிறான். தெரிந்துகொள்ளும் வீட்டு வேலையாள் வீரையா (செந்தாமரை) குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓடிப்போகிறான்.

தொட்டிலில் குழந்தைக்குப் பதிலாக பொம்மையைக் காணும் மாரப்பன் கோபத்தில் கொதித்துப்போய் பொம்மையைத் தூக்கி எறிகிறான். சப்தம் கேட்டு விழித்தெழும் தன் மைத்துனர் ராஜதேவரைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துகிறான்.

இதனைப் பார்த்து மீனா அதிர்ச்சியடைந்து மனநலம் பாதிக்கப்படுகிறாள். மாரப்பன் தனது அடியாட்கள் தாண்டவன், கரடி ராஜ் (ராமதாஸ்) ஆகியோரை வீரையா வீட்டுக்கு அனுப்பி வைக்கிறான். அங்கு செல்லும் அடியாட்கள், ‘வீரையா எங்கே’ என்று வீரையாவின் மனைவி தங்கத்திடம் கேட்டுத் துன்புறுத்தி, அவளைக் கொலை செய்கின்றனர். இக்கொலையை வீரையாவின் பெண் குழந்தை ராதா மறைந்திருந்து பார்க்கிறாள்.

காலம் கழிகிறது, குழந்தைகள் வளர்ந்து பெரியவராகின்றனர். இப்போது மாரப்பன் பெரும் பணக்காரராக இருக்கிறார். தனது தங்கைக்கு மனநலம் தெளிந்து விடாமல் இருக்க, மருந்து கொடுக்காமல் பார்த்துக் கொள்வதற்காகவே ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் உஷாவை (மனோரமா) நர்ஸாக நியமிக்கிறார். மாரப்பனின் மகன் கண்ணன் (சரத்பாபு) நேர்மையான போலீஸ் இன்ஸ்பெக்டராக வேலை பார்க்கிறான். அவனுக்குத் தெரியாமல் மாரப்பன் கடத்தல் தொழிலும் செய்கிறார்.

வீரையா தான் தூக்கிச்சென்ற குழந்தை காந்தனை வளர்த்து ஆளாக்கி, அவன் மூலம் மாரப்பனைப் பழிவாங்க நினைக்கிறார். காந்தனும் (ஜெய்சங்கர்) வீரையா விருப்பப்படி மாரப்பனைப் பழிவாங்க காத்திருக்கிறான்.

வீரையா-தங்கம் ஆகியோரை இழந்து அநாதையான ராதா (ஏ.மஞ்சுளா) சந்தையில் கோழி வியாபாரம் செய்கிறாள். அவளிடம் தகராறு செய்யும் ரவுடிகளை, கண்ணன் உதைத்துக் கைது செய்கிறார். அதனால் இருவருக்கும் நட்பு ஏற்படுகிறது. பிறகு, அது காதலாக மாறுகிறது.

அதேபோல தெருவில் ஆடிப்பாடி சம்பாதிக்கும் ஏழைப் பெண் ராணியிடம் (ராதிகா) ரவுடி தாண்டவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு தொந்தரவு செய்கின்றான். அதனைக் காணும் காந்தன் தாண்டவனுடன் சண்டையிட்டு, ராணியைக் காப்பாற்றுகிறான். அப்போது அங்கு வரும் இன்ஸ்பெக்டர் கண்ணன் தாண்டவனைக் கைது செய்து அழைத்துச் செல்கிறான். காந்தனுக்கும் ராணிக்கும் இடையே காதல் மலர்கிறது.



### புனைபெயர் உதயசூரியன்

ஒரு நாள் மாரப்பன் காரின் குறுக்கே திட்டமிட்டபடி வீரையா வந்து விழுகிறார். அதனைப் பார்த்து கூட்டம் கூடி மாரப்பனைத் திட்டுகிறது. அப்போது காந்தன் வந்து கூட்டத்தைக் கலைத்து, மாரப்பனைக் காப்பாற்றுவதன் மூலம் மாரப்பனின் நன்மதிப்பைப் பெற்று மாரப்பனிடம் வேலைக்குச் சேர்கிறான். மாரப்பன் செய்யும் கடத்தல் தொழில் பற்றிய ரகசியங்களை அறிந்து, போலீஸ் இன்ஸ்பெக்டர் கண்ணனுக்கு, ‘உதயசூரியன்’ என்ற புனை பெயரில் தகவல் சொல்கிறான்.

இந்நிலையில், சிறையில் இருந்து தாண்டவன் தப்பி வருகிறான். இன்ஸ்பெக்டர் கண்ணன் அவனைத் துரத்தி வருகிறான். இடையே மாரப்பன் தாண்டவனைக் காப்பாற்றி அழைத்துச் சென்று, ஒரு லட்சம் ரூபாய் பணத்தைக் கொடுத்து வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்லும்படி கூறி அனுப்பிவிட்டு, தாண்டவன் போலீஸில் மாட்டிக் கொண்டால், தன்னைப் பற்றிய உண்மைகளைச் சொல்லி விடுவான் என்று தாண்டவனைக் கொல்ல கரடி ராஜை (இராமதாஸ்) அனுப்புகிறான்.

> “ஏழை வீரையாவின் மகள் ராதாவுக்கும் பணக்கார மாரப்பனின் மகன் கண்ணனுக்கும் புரட்சித் திருமணம் நடக்கப்போகிறது.”

பணத்துடன் வரும் தாண்டவன், ராணியின் வீட்டுக்கு வந்து, ‘என்னுடன் வெளிநாட்டுக்கு வந்துவிடு சுகமாக வாழலாம்’ என்று வற்புறுத்துகிறான். அப்போது அங்கு வரும் காந்தன் தாண்டவனைத் தடுக்கிறான். இருவருக்கும் சண்டை நடக்கிறது. தரையில் விழுந்து கிடக்கும் பணப்பெட்டியை எடுத்துக் கொண்டு, தாண்டவனையும் துப்பாக்கியால் சுட்டுவிட்டு, கரடிராஜ் ஓடுகிறான். துரத்திச் செல்லும் காந்தனிடம் இருந்து கரடிராஜ் தப்பிச் செல்கிறான்.

கரடிராஜ் பதுங்கி இருக்கும் இடத்தைப் பற்றி, காந்தன் கண்ணனுக்குத் துப்புக் கொடுக்கிறான். தேடிச்செல்லும் கண்ணனிடம் தாண்டவனின் பணப்பெட்டியும் பாஸ்போர்ட்டும் சிக்குகின்றன. கரடி ராஜ் தப்பிவிடுகிறான்.

தனக்கு துப்புக்கொடுத்து உதவும் உதயசூரியனைச் சந்திக்க வேண்டும் என கண்ணன் தொலைபேசியில் காந்தனை அழைக்கிறான். மறுநாள் காலை மலைக்குன்றில் சந்திக்கலாம் எனக் காந்தன் சொல்கிறான். இவரும் சந்திக்க வருகின்றனர். ஆனால், அங்கு மறைந்திருக்கும் கரடிராஜ் துப்பாக்கியால் கண்ணனை நோக்கிச் சுடுகிறான். அதில் தப்பும் கண்ணனும் காந்தனும் கரடிராஜைப் பிடித்து, “யார் உனது எஜமான், உண்மையைச் சொல்” என விசாரிக்கும்போது, மலையில் இருந்து கரடிராஜ் தவறி விழுந்து இறந்து போகிறான். அதனால் தனது தந்தை மாரப்பன்தான் அவன் தலைவன் என்ற உண்மை, கண்ணனுக்குத் தெரியாமல் போகிறது.

ஒரு முறை கண்ணனும் ராதாவும் பயணிக்கும் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகிறது. வீரையா இருவரையும் காப்பாற்றுகிறார். வீரையாதான் தனது தந்தை என்பதை அறியாத ராதா, வீரையாவின் புகைப்படத்தை வாங்கிச் செல்கிறாள். கண்ணனின் கையில் இருக்கும் அப்படத்தைப் பார்க்கும் மாரப்பன் வீரையா உயிருடன் இருக்கும் விஷயமறிந்து, அவனைக் கொலை செய்யத் திட்டமிட்டு ‘ஏழை வீரையாவின் மகள் ராதாவுக்கும் பணக்கார மாரப்பனின் மகன் கண்ணனுக்கும் புரட்சித் திருமணம் நடக்கப்போகிறது’ என நாளிதழில் செய்தி போடுகிறான்.

அதனைப் பார்க்கும் வீரையா, தனது மகள்தான் ராதா என்பதை அறிந்து ராதாவைத் தேடி வந்து சந்திக்கின்றான். இருவரும் பாசத்தால் கண்ணீர் சிந்துகின்றனர். மேலும், ‘மாரப்பன் கொடியவன், அவன் மகனை நீ திருமணம் செய்து கொள்ளக்கூடாது’ என்று ராதாவிடம் சொல்லும் வீரையா, மாரப்பன் வீட்டுக்குச் சென்று ‘உனது மகனுக்கு என் மகளைத் திருமணம் செய்து தரமாட்டேன்’ என்று சொல்கிறான். ஆனால், மாரப்பன் சிரித்துக்கொண்டே ‘நான் விரித்த வலையில் நீயாக வந்து விழுந்துவிட்டாய்’ என்று சொல்லி, வீரையாவைக் கொலை செய்ய முற்படுகிறான். ஆனால், காந்தன் வந்து மாரப்பனுடன் சண்டையிட்டு, தனது வளர்ப்புத் தந்தை வீரையாவைக் காப்பாற்றுகிறான். இதனிடையே ராதா மூலமாக அனைத்து உண்மைகளையும் கண்ணன் அறிந்துகொள்கிறான். இறுதியில், மாரப்பன் கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படுகிறான்.

...காட்சி விரியும்

## அதானியின் ஊழலை விசாரியுங்கள்!

பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. அந்த அடையாளத்தை பா.ஜ.க.விடம் கொடுத்துவிட்டு, தலையாட்டி பொம்மை போல, பா.ஜ.க.வின் முடிவுகளுக்கு இணங்கி கட்டுப்பட்டு நிற்கிறது. கூட்டணியை அறிவிக்கும் துணிச்சல்கூட அ.தி.மு.க.வுக்கு இல்லாமல், அமித் ஷா சென்னை வந்து அறிவித்துவிட்டுப் போனார். அதன்தொடர்ச்சியாக, இப்போது அ.தி.மு.க. தலைமையில் முதல் பிரச்சார கூட்டத்தை நடத்தாமல், பா.ஜ.க. செங்கல்பட்டில் நடத்திய கூட்டத்தில் அ.தி.மு.க.வும் பத்தில் ஒன்றாக கலந்துகொள்ளும் பரிதாபத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

அக்கூட்டத்தில் பலரும் ஊழல்... ஊழல் என்று பேசியிருக்கிறார்கள். ஆனால், அதானியின் ஊழல்தான் இன்றைக்கு உலகம் முழுவதும் பேசுபொருளாக மாறியிருக்கிறது. ‘அதானி கிரீன் எனர்ஜி’ திட்டங்களுக்காக இந்திய அதிகாரிகளுக்கு ரூ.2,200 கோடி வரை லஞ்சம் கொடுக்கப்பட்டதாக அமெரிக்க வழக்கறிஞர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். ஆனால், இதை மறைத்து அமெரிக்க முதலீட்டாளர்களிடம் பல்லாயிரம் கோடி ரூபாய் முதலீடு பெறப்பட்டுள்ளதாகவும், இது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வெகுவாகப் பாதித்திருக்கிறது என்றும் குற்றம்சாட்டி, அமெரிக்க பங்குச் சந்தைக் கட்டுப்பாட்டு அமைப்பான ‘பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம்’ (எஸ்.இ.சி.) அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது.

இந்த வழக்கில், கௌதம் அதானி மற்றும் சாகர் அதானிக்கு முறைப்படி சம்மன் அனுப்பி விசாரிக்க, இந்தியத் தரப்பில் இருந்து போதிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பதால், இருவருக்கும் மின்னஞ்சல் மூலம் சம்மன் அனுப்ப அனுமதி கோரியுள்ளது. இந்த சட்ட நடவடிக்கைகள் காரணமாக, ‘அதானி என்டர்பிரைசஸ்’, ‘அதானி கிரீன்’, மற்றும் ‘அதானி போர்ட்ஸ்’ போன்ற பங்குகள் 10% வரை வீழ்ந்திருக்கின்றன. இதில் எல்.ஐ.சி.க்கும் ஒரே நாளில் 12,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால், கௌதம் மீதான இந்த ஊழல் புகார் குறித்து, பிரதமர் மோடியோ, பாரதிய ஜனதா கட்சியோ இதுவரை வாய் திறக்கவே இல்லை. எதிர்க்கட்சிகள் மீது மட்டும் ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகிற பா.ஜ.க.வின் வழக்கமான அரசியல் தமிழ்நாட்டில் இதற்குமுன்பும் எடுபடவில்லை, இனியும் எடுபடப்போவதும் இல்லை.

## ப்ளாஷ்பேக்



### வாழ்நாளில் சிறப்புமிக்க நேரம்!



எம்.ராஜசேகர்

2011-ஆம் ஆண்டில், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற, நானும் என் மனைவி மேனகாவும் கோபாலபுரம் இல்லம் சென்றிருந்தோம். நம் தானைத்தலைவர், அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். பார்வையாளர் வரிசையில், ஆவலுடன் காத்திருந்த என்னை ‘தம்பி வா’ எனக் கம்பீரக் குரலால் அழைத்தார் தலைவர். அக்கணம் நான் மெய்சிலிர்த்து நின்றேன். தலைவரை வணங்கி, அவரோடு நாங்கள் புகைப்படம் எடுத்துக்கொண்ட நாளும், நேரமும் வாழ்நாளில் வரலாற்றுச் சிறப்புகொண்டது.

– எம்.ராஜசேகர்,
ஒன்றிய துணைச் செயலாளர்,
புதுச்சத்திரம் வடக்கு ஒன்றியம், நாமக்கல் கிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### சிறப்பு மிக்க தலைப்புகள்!

1958-ஆம் ஆண்டு மார்ச் 8 மற்றும் 9-ஆம் தேதிகளில், பழனியில் நடைபெற்ற மதுரை மாவட்டக் கழகத்தின் 3-வது மாநாட்டின் கருத்துரைத் தலைப்புகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. கழக வளர்ச்சி, வரலாற்று அனுபவங்கள், இந்தியாவின் ஒற்றுமை, தென்னாட்டின் பொருள்வளம், சட்டம், பொதுத்தொண்டு, உழவர் நிலை, உள்ளாட்சிக் கழகங்கள், இன்ப திராவிடம், விடுதலை முரசு, போராட்டம் உள்பட பல தலைப்புகளில் தலைவர்கள் உரை நிகழ்த்தினர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131